மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு பேரவையை ஒத்தி வைத்து இதைப் பற்றி விவாதிக்க வேண்டியது அவசியம் இல்லை என்ற காரணத்தினுல் நான் இதற்கு அனுமதி தர மறுக்கின்றேன்.

3. அறிவிப்புகள்.

(அ) பேரவைத் துணைத் தலைவரை பதவி நீக்கம் செய்யக் கோரி திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அறிவிக்கை கொடுத்திருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்தது திரு. ஜேம்ஸ் கொடுத்துள்ள மற்றொரு ஒத்திவைப்புத் தீர்மானம்................. இதை எடுத்துக் கொள்வதற்கு முன் ஓர் அறிவிப்பு. திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் பேரவைத் துணைத் தலைவர் மீது ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை இப்போது கொடுத்திருக்கிருர்கள். அதற்கு 14 நாள் நோட்டீஸ் வேண்டும். அது 11—4—75 அன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(அ) சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில் நுழைந்து மாணவர்களேச் சிலர் தாக்கியது குறித்து—தொடர்ச்சி.

திரு. கோவை செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒத்திவைப்புத் தீர்மானம்—சட்ட சபையில் விவாதிக்க வேண்டிய ஒன்று—இவ்வளவு எடுத்துச் சொன்ன பிறகும் தாங்கள் அதற்கு அனுமதி தர வில்லை. அரசாங்கத்திற்கு ஆதரவாக நடந்து கொண்டு—அமைச்சர்களுக்கு ஆதரவாக தாங்கள் நடந்து கொண்டதால் அண்ணு தி.மு.க. -வின் சார்பில் நாங்கள் வெளி நடப்புச் செய்கிருேம் —கண்டிக்கிற வகையில்.

(அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. கே.டி. கே. தங்கமணி: தங்கள் தீர்ப்பை நான் குறை சொல்வதற்கில்லே. நாட்டுக்கு சமாதானம் அளிக்காத அரசின் நிலேயைக் கண்டிக்கிற வகையில் நாங்கள் வெளியேறுகிருேம்.

(இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திருமதி சத்தியவாணிமுத்து: அமைச்சர் அவர்கள் கூறும்போது அங்கே சாதியின் அடிப்படையில் நடந்தது என்று சொல்கிருர். சாதியை ஒழிக்க வேண்டிய கட்சியே அதற்குப் பொறுப்பாக இருந்திருக்கும்